157

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 குருதலம், மாம்பாக்கம்; செய. பங்குனி, உ௫ 8—4—55 தளிர் 27

20 M 1955
MADRAS

## குறளும் அறமும்

ஒவ்வொரு மனிதனும் 'தனது விருப்பம்' என்ற அளவுகோலினைக் கொண்டே தன் வாழ்வுப் பாதையினை அளக்கத் தொடங்குகின்றான். அவ்விருப்பம் கட்டுக்கோப்புடைய ஒரு நல்ல நிலையினை அடையுமானால் அதுவே குறிக்கோளாக மாறிவிடும்.

ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு நோக்கத்தினைத் தன் வாழ்வில் உடையவனாகவே யிருப்பான். இறையின் தன்மையினை அடைதல் வேண்டும் என்பது பற்றற்ற துறவிகளால் கூறப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. சமூக வாழ்வில் சாதாரண மனிதனது வாழ்க்கையில் உழைத்தல் பிழைத்தல் என்னும் குறிக்கோள் மட்டுமே ஊடுருவி நிற்கிறது. இந்த நோக்கத்தினை ஒரு கடலாகக்கொண்டு மனிதனது வாழ்வை ஒரு தோணியாகக் கொள்ளலாம்.

அவ்வாறு கடலைக் கடக்கத் துடுப்பு எங்கே? அலைதான் மனித உள்ளம். அலைபாயும் ஆசை. அதனை நிறைவேற்ற அறிவு உண்டு. எனில் அவ்வறிவுக்கு வழிகாட்ட ஒரு துணை வேண்டுமல்லவா? ஆம் இங்குத்தான் வாழ்வின் குறிக்கோள் தோன்றுகிறது. இக் குறிக்கோளினைக் காணத் தெரியாத நிலையில்தான் எவ்வாறு வாழ்க்கையை நடத்துவது என்பது மனித உள்ளத்தில் ஓயாத, ஒழியாத கேள்வியாகிவிட்டது. இக் கேள்விக்கு 'அறவாழ்வு மேற்கோள்' என்ற சிறந்த முறையில் விடையிறுக்கும் சிறப்பினால் திருக்குறள் ஓங்கி உலகமாயது.

அறம் என்று கூறியவுடன் உலக இச்சைகளைத் துறந்து காட்டினை அடைந்து தவம் செய்தல் என்பது பொருளன்று. அறத்தினைப் பாடவரும்போதெல்லாம் துறவறத்தினையே சிறக்கக் கூறுவன சில நூல்கள். வான்புகழ் வள்ளுவர் அவ்வாறு கருதவில்லை. எவ்வாறு துறக்க வேண்டும்? எனக் கேட்காமல் எவ்வாறு வாழவேண்டும்? என்னும் வினாவை எழுப்பி, 'அறவாழ்வு மேற்கொள்' என விடையும் கூறுகின்றார். அறமாவது யாது? என்ற வினா எழும்போது தான் வள்ளுவரின் வாழ்வுக் குறிக்கோள் தெற்றென விளங்குகின்றது. அவ் விளக்கமே மற்ற எல்லா நூலினின்றும் அவர் நூலினைச் சிறப்பிக்கின்றது.

'மனத்தின்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்கின்றார் வள்ளுவர்; இத் தொடரில் உலகம் முழுமையும் அடங்கிவிட்டது எனலாம். களங்கமில்லாது நேர்மையுடனிருக்குந் தன்மை, புறச் செயல்களிலும் வெளிச் சொல்லிலும் காணப்பட்டாலும் அவை அறமாகா. மனத்தின்கண் மாசு பிழை இல்லாதவனாகத் தூய்மை செம்மை உடையவனாக இருத்தலே அறம் என்று அஞ்சாது அறுதியிட்டுக் கூறுகின்றார். நடிப்பு முதலிய தந்திரங்களால் உள்ளத்தில் உள்ளதை ஒளித்துப் புற உலகை ஏமாற்றினாலும் உண்மை அவன் உள்ளத்தில் விளங்கி நிற்கும். 'நீராழம் கண்டாலும் நெஞ்சாழம் காண முடியாது' என்பது பழமொழி. அந்த நெஞ்சாழம் என்பதே உண்மையான மனப் பண்பு. இதனைப் பிறர் காணவும் முடியாது; அவரவர் தன்னுள்ளே காணாமல் இருக்கவும் முடியாது. தான் மனத்தின்கண் மாசுடையவனா அல்லனா என்பது அவனவனுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொருவனும் தன் மனத்திற்குக் கட்டுப்பட்டு, தன் மனத்திற்குப் பதில் கூறி, மனச் சான்றுடன் மாறுபடாமல் வாழ்வதே அறன் என முடிந்த முடிபாகக் கூறுகின்றார் பொய்யா மொழியார். —மூர்த்தி.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | செய, பங்குனி, | தளிர் |
|---|---|---|
| 7 | 8-4-55 வெள்ளி. | 27 |


## நடுநிலைத் தொண்டு

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுவரும் மறுமலர்ச்சிகள், புரட்சிகள் என்னும் பெயர்களில் எழுந்துள்ள இயக்கங்கள், அவற்றிற்குத் துணையாகவும் எதிராகவும் இயங்கிவரும் பல்வேறு கட்சிகள் இவற்றாலாகக் கூடிய விளைவுகள் எல்லாம் பார்க்கிற பலருக்குத் தமிழகத்தின் எதிர்காலம்பற்றிப் பல்வேறு எண்ணங்கள் உண்டாகின்றன. அதற்கு அடிப்படையில்லாமற் போகவில்லை.

ஒவ்வோர் இயக்கத்திலும் உண்மைகள் இல்லாமல் இல்லை; அறிவு பெருகிவரும் காலங்களில் ஐயுறவுகளும் தவறுகளுங்கூடத் தோன்றுவது இயல்புதானே!

உண்மை என்பது எப்போதும் மாறாது, அழியாது; ஆகவே உண்மை விளக்கங்களை அவ்வப்போதும் செய்துவரவேண்டும்; இது கடமை.

இவ்வகையில் பொறுப்பில்லாமலோ, அல்லது பொறுப்பிருக்கிறதென்று வீறிய பகையுள்ளங்கொண்டோ நடத்தல் நலம் பயவாது. நாடு, உண்மைகள் தெளிந்து ஒழுகுவதற்கு ஆவனவெல்லாம் செய்ய முயலவேண்டும்.

ஒன்று, இயக்கமுடையோர் உண்மைக்கு ஊக்கங் கொடுக்க வேண்டும், அல்லது மூடப் பழக்கங்களையே உண்மைகள் என்று கருதிக்கொண்டிருக்கும் எளிய மக்கள் செய்வதே சரியென்றேனும் சாதிக்கவேண்டும். இரண்டும் பொருந்தா எனின், நடு நிலையில் நின்று இருபாலாருக்கும் தரவேண்டிய தெளிவுகளைத் தந்து திருத்த வேண்டியவைகளைத் திருத்தி முன்னேறச் செய்ய வேண்டும்

இவைகளையெல்லாம், தக்கவர்கள் செய்யவேண்டும்; வேறு யார் செய்வது?

ஏதும் அறியாப் பொதுமக்கள் தாம்போன வழியே போகிறார்கள்; ஓரளவு கற்றுச் சிறிது தலையெடுப்போர், எடுத்ததை எல்லாம் தம்முடைய போக்கிலேயே முடித்துக், கண்டித்துவிடுகிறார்கள். இடையிலுள்ளோர், எல்லாத் துறையிலும் சமயத் துறையிலுங்கூடக் குழப்பம் கொள்ளுகின்றனர்.

கொள்கைகளோ தெளிவாக இருக்கின்றன; நடுநிலை நின்று உண்மைகளைக் காட்டித் தெளிவு தரும் தொண்டே இக்காலத்துக்கு மிகவுந் தேவை.

'இவைகளையெல்லாம் தெளிவுபடுத்தக்கூடிய சூழ்நிலையே இல்லை, என்ன செய்வது? அடிப்படையே ஆடிக் கிடக்கிறது. நாட்டு அரசியல் அமைதி பெறவில்லை! கல்வித் துறையில் நிலையான ஏற்பாடு இல்லை! மக்கள் பொருளாதாரம் சரியாக இல்லை!' என்றால், அவற்றிற்கான கிளர்ச்சிகளையும் கட்டாயம் செய்யத்தான் வேண்டும்; உயர்ந்த துறையாகிய அருள் நிலையையுந் தெளிவு செய்வித்தல் வேண்டும். ஒன்றுபட்டு, எல்லாக் கட்சிக்கும் இயக்கங்கட்கும் நடுநிலையாக இருந்து, உண்மைகளை ஏன் பரவச் செய்யக் கூடாது?

தமிழ் நாட்டின் கருத்துக்கள், இந்தியா முழுமைக்கும், ஏன், உலகத்துக்குங் கூட, வழிகாட்டும் நிலையில் இருந்தும், சில அடிப்படை நலங்களில் ஆந்திரர் மலையாளிகள்போல் அண்டை நாடுகளில் உள்ளவர்கள் அடைந்துள்ள அளவுகூட முன்னேற்றம் அடையாததற்குக் காரணம், இயக்கங்களை ஒன்றுபடுத்தவும் உலகுக்கு வேண்டிய தெளிவுகளைக் கொடுத்துத் திருத்தவும், நடை தவறுகிற காலங்களில் கண்டிக்கவும் முயற்சிகள் நடவாமையே ஆகும்.

ஆட்சியில் எக் கட்சி இருந்தாலும் அதன் முடிவுகள் இந்த நாட்டை எப்படிப் பாதிப்பதாயிருந்தாலும், பேசாமல் இருந்துவிடலாமா? அப்படியே இந்த நாட்டிலுள்ள மற்ற இயக்கங்கள் எப்படி நடந்தாலும் பாதகமில்லை என்று இருந்துவிடலாமா? அல்லது அவை, நாட்டை எப்படிக் குழப்பினாலும் குழப்பட்டும் என்றுதான் இருக்கலாமா?

அல்லது, பழிப்புக்கும் பிறவற்றிற்கும் பயப்படுவதுபோலத் தான் பேசாமல் இருந்துவிடலாமா? நிலைமைகளைத் தெளிவுபடுத்திவருதலே நல்லது.

குருகுலத்தார்க்கும் இதிற் கடமையுண்டு; பிறரைச் சொல்லிக்கொண்டுமட்டும் பொழுது கழித்தல் ஆகாதே! அது கருதிக் குருகுலத்தாரும் சிறு சிறு நடுநிலைத் தொண்டுகள் செய்யப் பழகிக்கொள்கின்றனர்.

எங்கள் ஆசிரியர் அவர்கள் தம் அன்பர் மாணவர்களுடன் ஆண்டுக்கொருகால் மேற்கொள்ளும் பாடல் பெற்ற திருவூர்த் திருப்பயணங்களும், இப்போது சில திங்கள்களாகச் சென்னையில் செய்துவரும் பேட்டைத் தொண்டுகளும் ஓரளவு நடுநிலைமைப் பணி செய்துவருகின்றன எனலாம். மக்களுக்கு நல்ல தெளிவைத் தந்து வருதலே நோக்கமாயிருக்கிறது; இந்நாட்டு அருள் நிலை பற்றியும் தெளிவுக்கு முயல்கின்றது.

திருப்பயணக்காலத்தில் அவர்கள் திருக்கூட்டத்தைப் பார்த்து அதில் ஈடுபடாதவர்களுக்குக்கூட இக் காலத்தில் வியப்புணர்ச்சி ஏற்படாமல் இல்லை.

ஏதோ ஒரு வகையில் நாட்டின் நன்மைக்குக் குருகுலம் (மாம்பாக்கம்) முயன்று வருகின்றது; எல்லாரையும், எல்லா முயற்சியாளரையும் இயக்கத்தவரையும் தம் உடன்பிறப்பினராய் அன்புகொண்டு அவரவர்கள் உண்மைகட்கு ஆதாவு தந்தும் விளக்கம் செய்ய முயல்கின்றது.

இனியவை என்றால்
ஏற்போம் புதுமையை!
ஏற்றவை என்றால்
இகழோம் பழமையை!

என்பது இதன் கருத்தாயுளது.

# திருப்பயணத் திட்டம்

ஆசிரியர் அவர்களின்பல செய்கைத் திட்டங்களில் ஒன்று சமயகுரவர்களாகிய நால்வர் பெருமக்களின் பாடல்களைப் பெற்ற திருவூர்களையெல்லாம் ஒரு முறையேனும் ஒன்றுவிடாமல் அன்பர்களுடன் திருக்கூட்டமாகச் சென்று வழிபட்டு வரவேண்டும் என்பது.

அதனை அவர்கள் பகுதி பகுதியாகப் பிரித்துக்கொண்டு, ஆண்டுக்கொருமுறை, தம்முடைய ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமைப் பதியாகப் போற்றிவரும் திருக்கழுக்குன்றத் திருப்பதியின்கண் ஆளுடைய அடிகள் திருநாளாகிய ஆனி மகத்தின்போது நடைபெறும் திருமுறைப் பெருவிழாவுக்கு முன், நிறைவேற்றி வருகிறார்கள்.

திருப்பயணக் காலத்தில் வழிபாட்டை மட்டும் செய்வது என்று இல்லாமல் அதனோடு இன்றியமையாத தொடர்புடைய ஆருயிர்த் தொண்டையும் இயன்றவரை தம் மன மொழி மெய் என்னும் முக்கரணங்களாலும் செய்வது என்னும் குறிக்கோளையும் கொண்டிருக்கிறார்கள். அக்காலத்தில், அவர்கள் திருக்கூட்டத்தோடு அங்கங்கே செய்கிற ஊர்வலங்கள், விளக்கவுரைகள், சான்றாண்மைச் சொற்பொழிவுகள் முதலியன மக்களுக்குப் பெருங் கிளர்ச்சியையும் நல்ல தெளிவையும் கொடுக்கின்றன.

நிற்க, 1952-ல் தொண்ட நாட்டுத் திருப்பதிகளையும் 1953-ல் நடு நாட்டுத் திருப்பதிகளையும் வழிபட்டு முடித்த அவர்கள், சென்ற ஆண்டு 1954-ல் சோழ நாட்டுத் திருப்பதிகளை வழிபடத் தொடங்கி 3-6-54 முதல் 27-6-54 வரை தில்லை முதல் குடந்தை வரை சென்று 78 பாடல் பெற்ற தலங்களையும் இடையிலுள்ள சில வைப்புத் தலங்களையும் வழிபட்டு மீண்டார்கள்.

இவ்வாண்டு 1955-ல் ஏப்ரல் திங்களில் சோழநாட்டுத் திருப்பயணத்தில் மற்றொரு பகுதியை மேற்கொள்ள இருக்கிறார்கள்.

இனிவரும் ஆண்டுகளில் முறையே எஞ்சும் சோழநாட்டின் பகுதியையும், பாண்டி நாடு, கொங்கு நாடு, சேர நாடுகளிலும், ஈழ நாடுகளிலும் வடநாடுகளிலும் உள்ள திருப்பதிகளையும் வழிபட்டுக் கொண்டு, அதன் பிறகு அந்த அருள் வலிவோடு, நமதருமைச் செந்தமிழ் நாட்டின் மொழி, கலை, நாகரிகம், வாழ்க்கை, சமயங்களின் உயர்ந்த உண்மையும் நன்மையுமான தன்மைகளை உலகம் தெரிந்து போற்றி உய்கிற வகையில் பரப்புரை செய்ய வெளிநாடுகளுக்கும் செல்ல வேண்டும் என்பது திருப்பயணத்தின் முழுத் திட்டமாகும்.

இத் திட்டத்திற்குத் திருவருள் துணை நிறைவாக இருக்கின்றது என்பது இதுகாறும் அதில் நிறைவேறியுள்ள பகுதியால் மிகுதியும் அறியக் கிடக்கின்றது.

மெய்யன்புடைய தொண்டர்கள், அறிஞர்கள், செல்வர்கள், சமயத் தலைவர்களின் இணக்கமும் துணையும் மேன்மேல் மிகுதிப்பட்டால் இத் திருப்பயணத்தினால் உலகம் நலம் பெறும் என்பதில் ஐயமில்லை.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்!

—குருகுலச் செய்தியாளர்.

# பழைய தொண்டன்

உலகில் சாதாரணமாக வேலை தேடும் ஒருவன் வேலைக்கு வைத்துக் கொள்ளும் முதலாளியிடம் போய்த் தாழ்மையுடன் நின்று வேலை கேட்பது வழக்கம். இதற்கு முன் எந்த இடத்திலாவது வேலை செய்திருந்தால் இன்னாரிடத்தில் வேலை செய்தேன் என்று தன் அனுபவத்தையும், நடத்தையைப் பற்றியும் சொல்லுவான். தகுதிச்சீட்டு இருந்தால் அதையும் காட்டுவான்.

வேலை கொடுக்கும் முதலாளி, வேலை கேட்க வந்தவனுடைய தோற்றத்தையும் வயதையும் கவனிப்பான். திறமையுடன் வேலை செய்வானா என்று யோசித்தபிறகு ஒரு முடிவுக்கு வருவான். பிறகு சம்பளத்தைப் பற்றி யோசிப்பான். தன்னை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்பதே வேலை கேட்க வந்தவனுடைய குறிக்கோள்; எந்தக் காரணத்தாலோ முதலாளி வேலையில்லையென்று சொல்லிவிட்டால், வந்தவன் பேசாமல் வேறிடம் போய் வேலை தேடுவான்.

இங்கே, ஒருவர் ஒரு முதலாளியிடம் போய் வேலைக்கு விண்ணப்பம் தருகிறார். தம்முடைய வயது, அனுபவம், திறமை, ஒழுக்கம், கூலி முதலிய விவரங்களையும் கூறுகிறார். வேலை கேட்க வந்தவர் சொல்லுவதையெல்லாம் கேட்டுக் கொள்ளுகிறார் முதலாளி. ஆனால் பதில் ஒன்றும் சொன்னதாகத் தெரியவில்லை.

வேலை கேட்பவர் உறுதியோடும் உரிமையோடும் 'நான் வேறிடம் போய் வேலை கேட்க மாட்டேன். நான் முன்னமேயே தங்களிடம் வேலை செய்திருக்கின்றேன்; வேலையில் என்னைச் சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும்; இல்லையானால் உலகம் அறியத் தங்கள் பேரில் பழி சுமத்தி உயிர் விடுவேன்' என்று சொல்லுகிறார்.

இப்படிப்பட்டவர் யார் என்று தெரிந்துகொள்ள நமக்கு அவா இருக்குமல்லவா? அவர்தான் நம் இராமலிங்க அடிகள்.

திருவொற்றியூரில் கோயில் கொண்டிருக்கும் தியாகப் பெருமானிடம் தம்மைச் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பம் செய்கிறார் எந்தவிதமாய் முறையிடுகிறார் என்பதையும், என்ன என்ன சொல்லி வேண்டுகிறார் என்பதையும் பார்ப்போம்.

வேலையின் அனுபவம்.

'நான் பழைய ஆள்; ஆதலால் நன்றாக வேலை செய்வேன். புதியன் என்று என்னைச் சேர்த்துக் கொள்ளாமல் அனுப்பிவிடக் கூடாது. இதனால் பழைய கணக்கை இப்போது எடுத்துப் பார்க்க வேண்டாம்' என்று கூறுகிறார்.

திருவருட்பா-2-வது திருமுறை
கோடி விண்ணப்பம் 6.

"புதிய னென்றெனைப்
போக்குதிரோநீர்
பூருவத்தினும்
பொன்னடிக் கடிமைப்
பதிய வைத்தன
ளுயினும் அர்தப்
பழங்க ணக்கினைப்
பார்ப்பதி லென்னே"

வயது:

பழைய ஆள் என்று நான் சொல்லுவதால் இவன் கிழவன், இவனால் என்ன வேலை செய்ய முடியும் என்று எண்ண வேண்டாம். நான் கிழவனல்லன். எந்த வேலையும் செய்வேன். வேலை ஒன்றல்ல; பல வேலை எனினும் வெறுப்பில்லாமல் மனமாரச் செய்வேன். காவ்பிடிக்கவும் தளரேன்; உம்முடைய பூதப்படையைக் கண்டும், பாம்பாபரணத்தைக் கண்டும் பயந்து ஓடமாட்டேன். உப்பில்லாக் கூழ் இட்டாலும் உண்பேன்; இந்த வேலையைச் செய் என்றால் தலையினால் நடந்து செய்வேன். தப்பிதமின்றிச் செய்வேன். அப்படி என்னையும் அறியாது நான் தப்பிதம் செய்து என்னைத் தேவரீர் தண்டித்தாலும் சலிப்படைய மாட்டேன்' என்று சொல்லுகிறார்.

கோடி விண்ணப்பம் 6.

"முதிய னல்லன்யா
னெப்பணி விடையும்
முயன்று செய்குவேன்
மூர்க்கனு மல்லேன்
துதிய தோங்கிய
வொற்றியூ ருடையீர்
தூயமால் விடைத்
துவசத்தி னீரே."

3 "உப்பி டாதகூ
ழிடுகினு முண்பேன்
உவந்திவ் வேலையை
யுணர்ந்துசெய் யெனநீர்
செப்பி டாமுனர்
தலையினு னடந்து
செய்ய வல்லன்யான்
செய்யுமப் பணிகள்

Telegrams: "RAMBROS"
**N. Ramu Bros,**
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

தப்பி டாததிற்
றப்பிருந் தென்னைத்
தண்டிப் பீரெனிற்
சலித் தளம் வெருவேன்
தப்பி டாவெனைக்
கருளொற்றி யுடையீர்
தூய மால்விடைத்
துவசத்தி னீரே."

கூலி:

'இப்படி நான் செய்யும் வேலைக்குக் கூலியே வேண்டாம்; தாங்கள் கூலி கொடுத்தாலும் கொள்ளேன்' என்று சொல்லுகிறார்.

4 "கூலி யென்பதோ
ரணுத் துணை யேனுங்
குறித்தி லேனது
கொடுக்கினுங் கொள்ளேன்"

ஒழுக்கம்;

"ஒழுக்க மில்லாதவனென்றும், என்ன வேலை செய்வேனென்றும் சந்தேகம் வேண்டாம். நான்மூர்க்கனல்லன்; நான் எப்படிப்பட்டவனு யிருந்தாலும் தங்கள் சமுகத்திலிருந்தால் நற்குணம் பெறுவேன்' என்று சொல்லிச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்கிறார்.

'மூர்க்கனு மல்லேன் ஒழுக்க மில்லவ னேரிடத் தடிமைக் குதவுவான் கொலிலன் றுன்னுகிற்பீரேற், புழுக்க நெஞ்சினேன் உம்முடைச் சமுகம் போந்து நிற்பனேற் புண்ணியக் கனிகள் பழுக்க நின்றிடுங் குணத்தருவாவேன்' என்கிறார்.

வேண்டுகோள்:

பிச்சையேற் றுண்ணும் பித்தர் என்று சில பேர் பேசுகிறார்கள். தேர்ந்து தேடினும் தேவர்போற்றலைமைத் தேவரில்லை யத்தெளிவு கொண்டு அடியேன் உமக்கு ஏவல் செய்ய இச்சையாதலால் வந்தேன்; நான் பலகால் முறையிட்டு நிற்கின்றேன்; என்பால் இரங்கித் தேவரீருடைய அணுக்கத் தொண்டனுகத் தம்முடன் என்னைச் சேர்த்திடீர் எனினும் புறத் தொண்டர் தம்முடனே பொருந்த வைக்கினும் போதும் என்று வேண்டுகிறார். அப்படி என்னை ஏற்றுக் கொள்ளாவிட்டால் உலகம் அறிய நம்மேல் பழி சுமத்தி என் உயிரை விடுவேன் என்கின்றார் நம் வடலூர் அடிகள்.

"என்ன நானடி
யேன்பல பலகால்
இயம்பி நிற்பதிங்
கெம்பெரு மானீர்
இன்னு மென்னையோர்
தொண்டனென் றுளத்தில்
என்று கொள்ளீரே
விருங்கடற் புவியோர்
பன்ன வென்னுயிர்
நம்பொருட் டாகப்
பாற்றி நும்மிசைப்
பழிசுமத் துவல்காண்
துன்னு மாதவர்
புகழொற்றி யுடையீர்
தூய மால்விடைத்
துவசத்தி னீரே"

வேறோரிடத்திலும் 'இன்று வந்து என்னை அடிமை கொள்ளாயேல் நின்றன்மேல் பழிவரும் என்மேல் பழியில்லை; சொல்லிவிட்டேன்' என்று கூறியுள்ளார். 2 வது திருமுறை-அறிவரும் பெருமை-3- ஆம் பாடல்.

எப்படியாவது தன்னையாட் கொள்ள வேண்டுமென்று திருவருட்பாவில் பல இடங்களில் முறையிடுகின்றார். குற்றம் குறைகளைப் பொறுத்து ஆட்கொள்ள வேண்டுமென்கிறார். இப்படிச் செய்தாய் ஏன் செய்தாய் என்று உம்மைக் கேட்பவர் யார்? தடுப்பவர் யார்! என்று சுதந்தரத்துடன் இறைவனைக் கேட்கின்றார் நமது வள்ளற் பெருமான்.

பிரார்த்தனைப் பதிகம். 6. போற்றித் திருப் பதிகம் 10. அடிமைப் பதிகம் 9. "உம்மைச் சினப்பவரின்று, ஆகையால் அடியேனுக்கு அருள் புரிய வேண்டும் என்கின்றார் சிவப்பிரகாச சுவாமிகளும். சோண சைல மாலை-4.

வேலை கேட்டுக் கொடாமற் போனால் வேறிடம்போய் வேலை தேடுவார்கள். இவரோ வேறிடம் செல்வதில்லை என்ற உறுதி கொண்டவர். அதாவது, சிவபெருமானை யன்றி வேறு கடவுளரை நாடேன் என்று அவர் கண்டிப்பாய்ச், சொல்லுகிறார். இது இறைவனிடத்திலுள்ள உறுதியைக் காட்டுகிறதல்லவா?

முதலாளியும் பணியாளரும் இத்தகைய ஆற்றலும் உள்ளன்புண்மையும் உடையவராயிருந்தால், உலகுக்குக் குறை ஏது?

குருகுல மாணவன்
உ. ம. துரைசாமி.

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்
ELEPHANT KISAN
பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# திருமடங்களிலே

**திருத் தருமபுரம்:**

சோழநாட்டுத் திருப்பயணத் திருக் கூட்டம் ஆசிரியர் இளவழகனார் அவர்களின் தலைமையில் திருப்பயண அறிக்கையிற் கண்டபடி தில்லையில் தொடங்கிப் பல• திருத்தலங்களை வழிபட்டுக் கொண்டு 14-6.54 காலை திருவிளநகர் வழிபாட்டுக்குப் பின் தருமபுர ஆதீனத் திருமடத்தை அடைந்தது.

திருப்பயண நிகழ்ச்சிகளில் மிக்க ஈடுபாடும் ஆதரவு மனப்பான்மையும் கொண்டுள்ள மகா சந்நிதானம் அவர்கள், கருணையோடு திருக்கூட்டத்தினருக்குச் சிறப்பான முறையில் காலை மாலைச் சிற்றுண்டிகளும், பகலில் அறுசுவையோடு கூடிய இன்னமுதும் அளித்தற்கான ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

அன்று மாலை ஆசிரியர் அவர்களுடன் திருப்பயணத் தொண்டர்கள் அனைவரையும் மகா சந்நிதானம் அவர்கள் நேரில் அழைத்து ஆடவரும் மாதருமாகச் சற்றேறக்குறைய சம எண்ணிக்கையோடு இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் திருக்கூட்டமாக வந்திருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றார்கள்.

"பல காரைக்காலம்மையார்களையும், மங்கையர்க்கரசியார்களையும், திலகவதியார்களையும் ஒருங்கு காண்பதுபோல் உங்களைப் பார்த்துப் பரமானந்தமடைகின்றேன். சமய மறுப்பாளர் தீவிரமாய் மாற்றுப் பிரசாரங்கள் செய்து மக்கள் மனதைக் குழப்பிவரும் இந் நாளில் இளையோரும் முதியோருமாய் இருபாலாரிலும் இருநூற்றுவர்க்கு மேற்பட்டவர் திரண்டு இத் திருத் தொண்டை மேற்கொண்டது பெருவியப்பையும் மகிழ்ச்சியையும் தருகின்றது. திருவருளின் திறத்தையும் பெருமையையும் மக்களிடையே எடுத்துச் சொல்லிச் சைவம் மீண்டும் தழைத்தோங்கிப் பயன் தருமாறு செய்ய இத் திருக்கூட்டம் பெரிதும் பயன்படும் என்ற நம்பிக்கை உண்டாகின்றது. கிடைத்தற்கரிய சிறந்த ஆசிரியர் வாய்க்கப் பெற்ற நீங்கள், அவர்கள் வழி நின்று ஆண்டுக்கொருகால், பெருந்திரளில் இத்தகைய திருப்பயணத் திருத்தொண்டு மேற்கொள்வது பெரிதும் பாராட்டத்தக்கது. உங்கள் எல்லாருக்கும் ஆண்டவன் அருள் நிரம்ப இருக்கின்றது" என்றெல்லாம் உணர்ச்சியோடு பேசி ஊக்கமூட்டி அருளுரை வழங்கி வாழ்த்தினார்கள்.

அப்போது, ஆசிரியர் கேட்டுக் கொண்டபடி, திருக்கழுக்குன்றத்தில் மணிவாசகப் பெருமான் திருநாளில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் நடத்தும் திருமுறைப் பெருவிழாவுக்கு ஓதுவார்களை அனுப்புவதாக வாக்களித்தார்கள். (அப்படியே 2, 3 பேரை அனுப்புவித்தார்கள்.)

அதோடு இதுகாறும் தொடர்ந்து 12 நாட்கள் திருப்பயணம் மேற்கொண்ட அன்பர்கள் ஒருநாள் ஓய்வு பெற்றுப் போதல் நல்லது என்று திருவுளங்கொண்டு, அருளே உருவாய அடிகளார் அவர்கள், திருப்பயணத் திருக்கூட்டத்தைத் தம் திருமடத்தில் தங்கச் செய்து, அனைவர்க்கும் எண்ணெய் முழுக்காட்டி இளைப்பாற்றுதற்கு ஏற்ற வசதிகளைச் செய்தருளினார்கள். அன்று மாலை, மகா சந்நிதானம் அவர்களே நேரில் இருந்து திருமடத்தைச் சார்ந்த திருக்கோயிலில் அம்பிகைக்குச் சிறப்பு வழிபாடு நடத்தி அலங்காரங்கள் செய்வித்து அனைவர்க்கும் பிரசாதம் வழங்கினார்கள்.

இவ்வாறு திருமடத்தில் மட்டுமன்றித் திருக்கூட்டத்தார் வழிபடச் சென்ற ஆதீனத் திருக்கோயில்களிலெல்லாம் திருக்கூட்டத்தார் தங்கி உணவு கொண்டு வழிபாடும், சமயப் பிரசாரமும் செய்தற்கான எல்லா வசதிகளையும் சிறப்பான முறையில் செய்விக்கும்படி ஆணை பிறப்பித்த மகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியை என்னென்று விவரிப்பது!

இம்மட்டோ! திருக்கூட்டத்தார் விரும்பியபடி 7-6-54 முதல் 18-6-54 வரை 12 நாட்களுக்குத் திருமடத்தாரின் பிரசார வாகனத்தையும், அத்துடன் 'மருள் நீக்கியார்' என்னும் மணியும் நீறும் பூண்ட மாசற்ற அன்பர் ஒருவரையும் உடன் அனுப்பிப் பேருதவி புரிந்த சந்நிதானம் அவர்களுக்குக் குருகுலத் திருக்கூட்டம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது. இறுதிவரை மருள் நீக்கியாரையும் இவ் வாகனத்தையும் அனுப்ப இயலாமற் போனதற்குக் காரணம், திருமடத்தில் குருபூசை விழா வந்து விட்டதே ஆகும்.

இங்ஙனம் குருகுலத்தாரின் திருப்பயண வெற்றிக்குப் பேருதவி புரிந்த மகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் சைவமுந் தமிழுந் தழைத்தோங்கும் என்பதில் ஐயமென்ன இருக்கிறது!

**திருவாவடுதுறை:**

திருப்பயணத் திருக்கூட்டம் 18-6-54 அன்று பகல் 12 மணிக்குத் திருவாவடுதுறைத் திருமடத்தை அடைந்தது. மகா சந்நிதானம் அவர்கள் காலையிலேயே திருக்கூட்ட அன்பர்களை எதிர்பார்த்து அவர்களுக்குச் சிற்றுண்டி கொடுக்க வேண்டும்

என்று கனிவோடு ஏற்பாடு செய்து வைத்திருந்தும் காலம் தாழ்ந்து விட்டதால் அதனைக் கொள்ள முடியாமற் போயிற்று. எனினும், விரைவில் அறுசுவை யுணவு அமைக்கப்பட்டு அனை வருக்கும் மிகப் பரிவோடு பரி மாறப்பட்டது.

மாலைச் சிற்றுண்டிக்குப் பின் ஆசிரியர் அவர்களுடன் திருக் கூட்டத்தன்பர்கள் அனைவரை யும் மகா சந்நிதானம் அவர்கள் நேரில் அழைத்து நலம் வின வினார்கள்.

மாதர்கள், குருகுலப் பாடல் களை இனிமையாகப் பாடக் கேட்டு, மிக மகிழ்ச்சியுற்றுப் பாராட்டினார்கள்.

பிறகு ஆசிரியர் அவர்கள் திருக்கூட்டத்திற்குத் திருமடத்தி லிருந்து சில மாட்டு வண்டிகளும் 'ஜீப்' உந்துவண்டி ஒன்றும கொடுக்க அடுத்த தலங்கள்வரை திருக்கூட்டம் செல்வதற்கு உதவினார்கள்.

இவற்றோடு திருமடத்தைச் சேர்ந்த திருக்கோயில்களுள்ள தலங்களிலெல்லாம் முன்னேற் பாட்டோடு ஆர்வங் காட்டி அதன்படி தக்க ஏற்பாடுகள் செய்து ஆதரித்தார்கள். திருக் கூட்டத்தார் தங்கவும் உணவு கொள்ளவும் வழிபாடு பிரசாரங் களைச் சிறப்பாகச் செய்யவும் வசதிகள் செய்வித்தார்கள். இயன்ற இடங்களில் வண்டி வசதிகளையும் செய்விக்கப் பணித் திருந்தார்கள்.

இரண்டொரு தினங்களேனும் திருமடத்தில் தங்கி இளைப்பாறிச் செல்லுமாறும் தெரிவித்தார்கள். மாதர்களும் ஆடவரும் பெருந் திரளாய் இங்ஙனம் திருத் தொண்டுமுகமான திருப்பய ணம் மேற்கொண்டதற்கு மிக்க மகிழ்ச்சி கொண்டு அனைவரை யும் பாராட்டி வாழ்த்தியருளினார் கள். மாலையில் திருமடத்தில் நடைபெறும் பூசையைச் சிறப்பு முறையில் செய்து அனைவர்க்கும் திருநீறு வழங்கினார்கள்.

நிற்கத், திருமடத்து உந்து (வான்கள்) வண்டிகள் அந்த நேரத்தில் கெட்டுப்போயிருந் தமையால் அவற்றைத் திருக் கூட்டத்திற்குக் கொடுத்துதவ முடியாமல் போய்விட்டதே என்று மகா சந்நிதானம் அவர் கள் ஆராமையோடு தெரிவித்த நிலை, அவர்களின் கனிந்த உள் ளத்தை நன்றாக எடுத்துக் காட் டியது.

இங்ஙனம், குருகுலத்தார் தொண்டுகளைச் சிறப்பித்த அடி களாரின் திருவடி மலர்களை வணங்கி மேலும் பல நல்ல தொண்டுகளைச் செய்ய உணர்ச்சி கொள்வதல்லாமல், வேறு செய் யக் கடவது என்ன இருக் கிறது!

திருப்பனந்தாள்:

காசிமடத்து மகா சந்நிதானம் அவர்கள் தம் திருமடத்து வெளி யீடுகளாகிய முத்துக்குமாரசா மிப் பிள்ளைத் தமிழ், நீதி நெறி விளக்கம் போன்ற சில நூல் களைச் சில அன்பர்கள் வழி 4-6-54 அன்று திருப்பயணம் புறப்பட்ட மூன்றாம் நாளே திருநாரையூருக்கு அனுப்பி, அனைவருக்கும் வழங்கச் செய் தார்கள். அது அன்பர்களுக்கு மிக்க மகிழ்ச்சியையும் ஊக்கத்தை யும் உண்டாக்கியது.

திருக் கூட்டம் 25-6-54 அன்று தம் திருமடத்துக்கு வந்தபோதும் கந்தபுராணம் உரைநடை நூலும் மற்றும் பல வெளியீடுகளும் அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.

திருக் கூட்டத்தார்க்கு 25-6-54 அன்று காலை மாலை சிற்றுண்டிகளும் பகல் உணவும் திருமடத்தில் மிகச் சிறப்பாகச் செய்து வைக்கப்பட்டது. நண் பகலில் மகா சந்நிதானம் அவர் கள் வழக்கப்படி செய்யும் பூசை நேரத்தில் தாமே விரும்பித் திருக் கூட்டத்தினரை வரவழைத்து அனைவருக்கும் திருநீறு கொடுத்து அடுத்த பட்டத்தி லுள்ள சந்நிதானம் அவர்களைக் கொண்டு ஆசி உரை கூறச் செய்து ஊக்க மூட்டினார்கள்.

திருக்கழுக்குன்றத்தில் மாணிக்கவாசகப் பெருமான் திருநாளில் ஆண்டுதோறும் நடை பெற்று வரும் திருமுறைப் பெருவிழாப் பற்றி ஆசிரியர் கூறிய விளக்கவுரைகளைக் கேட்டு மகிழ்ந்து, அதன் சிறப்பையும் முதன்மையையும் நினைந்து, அண் மையில் அத் திருவிழாவிற்கு வரும் ஓதுவார்களுக்குத் திரு வமுது வழங்குவதற்கென்று ஆரம்ப உதவியாக ரூபா 5000– வைப்பு நிதியாக வைத்திருக் கிறார்கள். தக்க இடங்களி லெல்லாம் பல நல்லறக் கட்டளை களை ஏற்படுத்தித் தமிழும் சைவ மும் தழைத்தோங்கச் செய்து வரும் திருப்பனந்தாள் திரு மடத்து மகா சந்நிதானம் அவர் கள், குருகுலத்தாரின் திருப்பய ணத்தை அப்போதைக்குத் தக்க முறையில் வரவேற்றுச் சிறப் பித்து உதவிகள் பல செய்த தோடு, பயணத்தின் நினைவு அன் பர்களுக்கு என்றும் இருக்கும் படி, அவர்களுக்கு நூல்கள் வழங் கியதும் பின் திருக்கழுக்குன்ற விழாவுக்கு ஓர் அறக்கட்டளை நிறுவியதும் பெரிதும் போற்றி மகிழத்தக்க பெருஞ் செயல் களாக இருக்கின்றன!

—o—

## யாத்திரைப் பயன்

கடவுள், உயிர்கள், பாசம் என்னும் முப்பொருள்களில் ஆன்மாக்களின் பொருட்டே இறைவன் ஐந்தொழில் நிகழ்த்தி வருகின்றான். ஆன்ம அறிவை மறைத்திருக்கும் மலத்தைச் சிறிதுசிறிதாக நீங்கச் செய்து இறுதியில் தன்பால் இறைவன் அவைகளைச் சேர்த்துக் கொள்வன். மலம் அறவே நீங்கும் காலம் எதுவோ அதுவே இறுதியான விடுதலைக் காலம்!

இதற்காக இறைவன், மாயையைக் கொண்டு உலகங்களைப் படைத்து அவைகளில் உயிர்கள் உடலெடுத்துப் பிறக்குமாறு செய்கின்றனன். அவ்வுடலும் மாயையாலேயே ஆக்கப்படுகின்றது. அப்படியாயின், இறைவன் நமக்காகக் கொடுத்த உலகங்களையும் உடலையும் நன்றாய்ப் பயன்படுத்த வேண்டுமன்றோ? எப்படி?

பயன்படுத்துவதில் இருவகை உண்டு. ஒன்று, இறைவன் கருத்துக்கு இணங்க மலம் நீங்கும் முறையில் பயன்படுத்துவது; மற்றொன்று, கருவியாகிய மாயையின் மயக்கிலேயே அகப்பட்டுப், போக உணர்வோடு நுகர்வது.

பின் சொன்னபடி நுகர்வோர் இறைவன் கருத்துக்கு மாறாக நடப்பதால், பிறவி மல்கி இறைவன் திருவடி சேர்வதினின்றும் விலகிச் செல்பவராவர்.

உடலைத் திருவருள் பதிவதற்கு ஏற்ற முறையில் வைத்துக் கொண்டு, உலகில் திருவருள் பதிவதற்கேற்ற முக்கிய இடங்களிற் சென்று இறை நினைவோடு தோயும்போது திருவருள் நன்றாய்ப் பதியும்; திருவருளை ஆன்மாவின் உணர்விற் பதிக்க உதவுகின்ற ஒரு கருவியே மாயை.

## தவறு பெரிதுடைத்தே

தவறு பெரிதுடைத்தே! தவறு பெரிதுடைத்தே!
புவனியைச் சூழ்ந்த புறவிருள் கடியும்
கதிரவ னுலகங் களிப்புற நீனிற
உததியி லெழுந்தாங் குளத்திரு ணீக்க
வரார் மயில்மிசை யிவர்ந்தருள் செய்யும்
ஏரகத் துறையு மிமையவர் கோவே!
செய்பல வளர்க்குஞ் செவிலியே போலும்
கைபுனைந் தியற்றாக் கவினுடைக் காவிரி
சோலை பலவுந் தோகைபோல் விரித்து
நீலமா மயில்போல் நின்மருங் காடவும்
மற்றதன் வடபால் திகழ்குன் றமர்ந்த
கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே!
நூலறி புலவருள் மேலென விளங்கும்
வேலையை யெறிந்த வேலுடை வேளே!
நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
வான்வளம் பெருக்கும் நான்மறை யோர்வாழ்
தில்லை மன்றிலோர் திருவடி யூன்றி
எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடந்துயிர்
இன்பமே யெய்த எடுத்தபொற் கழலினன்,
மன்னவ ராயினு மற்றவ ராயினும்
வேறுபா டின்றி நாணினை யகற்றி
ஊனுகள் செய்யுங் கொடும்பசி யுறினும்
பைங்கூ ழுண்ணாப் பல்பொறி யுடைய
செங்கட் புலித்தோல் சேர்த்தசிற் றிடையினன்
பொடியணி மார்பன் புத்தேளிர் போற்றக்
கடுவமைந் திலங்குங் கவின்பெறு கண்டன்
கருணைசேர் விழியினன் கண்ணுத லுடையோன்
உருவங் குறைந்த ஒண்ணில வோன்வாழ்
விரிசடை யண்ணல் விளங்கிழை பகிர்ந்த
எரிபோல் மேனியன் யாவரும் போற்றும்
பிரணவப் பொருளாய்ப் பிறங்கிடுஞ் சிவபிரான்
பிரமனுங் காணாத் திருமுடி தாழ்த்து
மாணவ னாக மாண்பொரு ளுரைத்தனை
ஆணவந் துணையா அவனியில் வாழ்வேன்
குலத்திற் கொடியேன் குணமும் பொல்லேன்
நிலத்திடை யொன்றும் நண்ணுத லில்லேன்
பல்லோர் முனியப் பயனில சொல்லி
நல்லோர் தம்மை நணுகா வினையேன்
நாவினை யென்பால் வருந்திக் காண்டும்
நாயினுங் கடையேன் நற்றவா உன்னைக்
"குருவாய் வருவாய் அருளே தருவாய்
முருகா" என்றே முறையிடல்
தவறு பெரிதுடைத்தே! தவறு பெரிதுடைத்தே!

ஒரு மாணவர்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)